அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஆணை பிறப்பிப்பவர் :- திரு.மு.இராமன், எம்.எஸ்சி.,எம்.எட்.,
நி.மு.எண்: 04005/அ1/2022, நாள். 06.05.2022.

------

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை – அரியலூர் மாவட்டம், விளந்தை ஆண்டிமடம் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.சி.கார்த்திகேயன், என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 26.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் –தொடர்பாக.

பார்வை 01. அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 04808/அ4/2021, நாள் 14.07.2021.

02. சம்மந்தப்பட்ட பணியாளர் கருத்துருக்கள்.

03. அரியலூர் மாவட்டம், விளந்தை ஆண்டிமடம் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரின் கடித.எண் 60/2022, நாள் 26.04.22.

----------

<u>ஆணை</u>

அரியலூர் மாவட்டம், விளந்தை ஆண்டிமடம் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.சி.கார்த்திகேயன், என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் <u>26.02.2021 முற்பகல்</u> முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோரி பார்வை (2) மற்றும் (3)–ன் வழி கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது.

அவ்வாறு மேற்காண் செயல்முறைகளில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 14–ன் கீழ் உள்ள இளநிலை உதவியளார் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட திரு.சி.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர், அரசு மகளிர்உயர்நிலைப்பள்ளி, விளந்தைஆண்டிமடம், என்பாருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்ப்பட்டு **இளநிலை உதவியாளர்** பணியில் சேர்ந்த நாளான <u>26.02.2021 முற்பகல்</u> **பணிவரன்முறை** செய்து ஆணையிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

01. இளநிலை உதவியாளர் பணியில் தமது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிக்காண் பருவக்காலத்தினை மேல்அலுவலரின் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் முடிக்கப்பட வேண்டும்.
02. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சிப் பெற வேண்டும்.
03. தகுதிகாண் பருவ காலத்திற்குள் இளநிலை உதவியாளர் பவானிசாகர் அடிப்படைப்பயிற்சியினை முடித்து, அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சிப் பெற வேண்டும்.
04. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது காலமுறை ஊதிய உயர்வு மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

இணைப்பு பணிப்பதிவேடு – 1 தொகுதி.

முதன்மைக்கல்வி அலுவலர்,
அரியலூர்.

6/5/22

பெறுநர்
தலைமையாசிரியர்,
அரசு மகளிர் உயநிலைப்பள்ளி,
விளந்தை ஆண்டிமடம்.
அரியலூர் மாவட்டம்.
(சம்மந்தப்பட்டவருக்கு உபரிநகலுடன்)